| விழுப்புரம் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்<br>முன்னிலை : கோ. கிருஷ்ணப்பிரியா பி.எஸ்சி.,எம்.ஏ., பி.எட்.<br>ந.க.எண். 3783/அ3/2021 நாள்: 14-07-2021 | |
|---|---|
| பொருள் | பள்ளிக்கல்வி – கருணை அடிப்படையில் நியமனம் – 2019-2020ம் ஆண்டிற்குரிய காலிப்பணியிட மதிப்பீடு - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடங்கள் நிரப்புதல் - ஆணை வழங்குதல் – தொடர்பாக. |
| பார்வை | 1) அரசாணை (நிலை) எண்.101 பள்ளிக் கல்வி (வரவு செலவுத்திட்டம்) துறை நாள்: 18.05.2018.<br>2) அரசாணை (நிலை)எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (Q1) துறை நாள்: 23.01.2020.<br>3) பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.65150/ஜே/இ4/2019,நாள்: 08.07.2021. |

பார்வையில் காணும் அரசாணைகள், ஆணையரகத்தினால் வழங்கப்பட்ட அறிவுரைகள் மற்றும் பணிநாடுநர்களால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களின் அடிப்படையில் பணிக்காலத்தில் காலமான கீழ்க்குறிப்பிட்ட அரசு ஊழியரின் வாரிசுதாரருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் கருணை அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நியமனம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பெயர் மற்றும் முகவரி<br>திரு/திருமதி/செல்வி | இறந்த அரசு ஊழியரின் பெயர் பதவி (ம) பணிபுரிந்த அலுவலகம் / பள்ளி | இறந்த தேதி | நியமனம் செய்யப்படும் அலுவலகம் / பள்ளி |
|---|---|---|---|
| ஆ.ராஜ்குமார்<br>எண். 3/229<br>மேட்டுத் தெரு<br>ஆவுடையார்பட்டு<br>விழுப்புரம் மாவட்டம். | திரு.P.ஆறுமுகம், பதிவுரு எழுத்தர், அரசு மேல்நிலைப் பள்ளி, விக்கிரவாண்டி, விழுப்புரம் மாவட்டம். | 04-01-2012 | GOVERNMENT HIGHER SECONDARY SCHOOL VIKARAVANDI VILLUPURAM |

1. நியமனம் பெற்றுள்ள நபர் இந்நியமன ஆணை கிடைக்கப்பெற்ற ஒருவார காலத்திற்குள் பணியில் சேர வேண்டும். மேற்படி தேர்வாளருக்கு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2017, அரசாணை (நிலை) எண்.303/நிதி (ஊதியக்குழு)த் துறை நாள்.11.10.2017 Level 8, 19500-62000 என்ற ஊதிய ஏற்ற முறையில் ஆரம்ப நிலை ஊதியம் மற்றும் இதரப் படிகள் பெறத் தகுதியுடையவராவார்.

2. நியமனம் பெற்றுள்ள நபர் பணியில் சேரும் போது உதவி மருத்துவ அலுவலரிடமிருந்து உடல்நலத் தகுதிச்சான்றினைப் பெற்று பணியில் சேர வேண்டும்.

3. இப்பணியாளர் பங்குத் தொகை ஒய்வூதியத் திட்டத்தில் (Contributory Pension Scheme) மட்டும் சேரத் தகுதியுடையவராகிறார்.

4. நியமனம் பெற்றுள்ள நபர் முன்னிலைப்படுத்திய கல்விச்சான்றிதழ்கள் மற்றும் கருணை அடிப்படையில் நியமனம் சார்பான இதர ஆவணங்கள் உண்மையானவை அல்ல என்றோ, மதிப்பீடு செய்ய இயலாதவை என்றோ பின்னர் கண்டறியப்பட்டால் இந்நியமனம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

5. தனியர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

6. நியமனம் பெற்றுள்ள நபர் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தமிழை ஒரு பாடமாக பயின்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இல்லையெனில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ் இரண்டாம் நிலை தேர்வில் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

7. நியமனம் பெற்றுள்ள நபர் பணியேற்றவுடன் அவரது பணியேற்பு அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு சார்ந்த அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. பார்வை 2-ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட நபர்களின் பணியினை விதிகளின்படி, ஒரு ஆண்டிற்குள் பணிவரன்முறை செய்ய அனைத்துறைத் தலைவர்கள் / ஆட்சியாளர்கள்

விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வரசாணைப்படி செயல்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

14/7/21

முதன்மைக் கல்வி அலுவலர்.
விழுப்புரம்

14/7/21

பெறுநர் :

ஆ.ராஜ்குமார்
எண். 3/229
மேட்டுத் தெரு
ஆவுடையார்பட்டு
விழுப்புரம் மாவட்டம்.

நகல்கள் :
1. சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்,
2. சம்மந்தப்பட்ட மாவட்டக்கல்வி அலுவலர்,
3. சென்னை - 6 தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.